**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No. 623/2018**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : சித்ரா | | **Caste** | : | |
| **Husband Name** | : முத்துக்குமார் | | **Calling** | : | பேக்கரி கடை |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | | **Age** | : | **51/2026** |
| | | | **Dated** | : | **18.05.2026** |

**18.05.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**1 எதிரி ஆஜர். 2 எதிரி ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed**

**<u>சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் வந்ததாக சொன்ன இருசக்கர வாகன பதிவு எண் மற்றும் விவரங்கள் குறித்து போலிசார் விசாரணையிலும் புகாரிலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரிகளின் அடையாளம் மற்றும் விவரம் குறித்து போலிசார் விசாரணையிலும் புகாரிலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகாரில் குறிப்பிட்டுள்ள 9 பவுன் செயின் என்னுடையது என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி செயின் என்ன மாடல் என்பது பற்றி புகாரில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து நகையை திரும்பப்பெறும்போது நல்லமுறையில் இருந்தது என்றால் சரிதான். பொதுவாக ஒரு நபர் நகையை அத்தால் செயில் இரண்டு அல்லது மூன்று துண்டாக ஆகிவிடும் என்றால் சரிதான். புகாரில் என்னுடைய போன் நம்பரையோ அல்லது அ.சா.1ன் போன் நம்பரையோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

எனது எண்ணை கொடுத்துள்ளேன். புகாரில் எனது உறவினருக்கு தகவல் சொன்னதாக குறிப்பிட்டபோது யார் அந்த உறவினர் என பெயர் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகாரிலும் போலிசார் விசாரணையிலும் முத்துராஜ்க்கு போன்மூலம் தகவல் சொன்னேன் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ நேரத்தில் நான் இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்ததாகவும் , கழுத்தில் காயம் ஏற்பட்டது என்றும் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.05.18 13:52:23 +0530

Judicial Magistrate No.II
Dindigul.